**தமிழ்நாடு அரசு**

**இந்து சமய அறநிலையத்துறை**

**அருள்மிகு நரசிம்மசுவாமி திருக்கோயில், நாமக்கல் நகர்–637001.**

**வேலை வாய்ப்பு அறிவிப்பு**

இத்திருக்கோயிலில் காலியாக உள்ள கீழ்க்கண்ட பணியிடங்களுக்கு தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண். | பதவியின் பெயர் | காலியிட எண்ணிக்கை | ஊதிய விகிதம் | கல்வி மற்றும் இதர தகுதிகள் விபரம் |
|---|---|---|---|---|
| 1. | உதவி சுயம்பாகம் (உள்துறை) | 2 | Pay Matrix 10, Level–1 ரூ.10000–31500 அடிப்படை சம்பளம் ரூ.10000/– | 1. தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்.<br>2. இத்திருக்கோயிலில் நடைமுறையில் உள்ள பழக்க வழக்கங்களின்படி நைவேத்யம் மற்றும் பிரசாதம் தயாரிக்க தெரிந்திருக்க வேண்டும். |
| 2. | இளநிலை உதவியாளர் (வெளித் துறை) | 1 | Pay Matrix 22, Level–1 ரூ.18500–58600 அடிப்படை சம்பளம் ரூ.18500/– | SSLC தேர்ச்சி அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட அதற்கு இணையான கல்வித்தகுதி பெற்றிருக்க வேண்டும். |
| 3. | தட்டச்சர் (வெளித் துறை) | 1 | Pay Matrix 22, Level–1 ரூ.18500–58600 அடிப்படை சம்பளம் ரூ.18500/– | 1. SSLC தேர்ச்சி அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட அதற்கு இணையான கல்வித்தகுதி பெற்றிருக்க வேண்டும்.<br>2. அரசு தொழில்நுட்ப தேர்வுகளில் i) தட்டச்சு தமிழ் மற்றும் ஆங்கிலம் இரண்டிலும் உயர்நிலை அல்லது ii) தமிழில் உயர்நிலை, ஆங்கிலத்தில் கீழ்நிலை அல்லது (iii) தமிழில் கீழ்நிலை, ஆங்கிலத்தில் உயர்நிலையில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேற்படி வ.எண்.(i)–ல் உள்ளபடியான தகுதியான விண்ணப்பதாரர்கள் இல்லாதபட்சத்தில் மட்டுமே மீதமுள்ள இரு பிரிவுகளில் உள்ள விண்ணப்பங்கள் வரிசை கிரமப்படி பரிசீலிக்கப்படும்.<br>3. அரசால் அங்கீகரிக்கப்பட்ட Computer Application and Office Automation அல்லது அதற்கு இணையான சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | டிக்கெட் பஞ்சர் (வெளித் துறை) | 1 | Pay Matrix 12, Level–1 ரூ.11600–36800 அடிப்படை சம்பளம் ரூ.11600/– | தமிழில் எழுத படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். |

**நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரர்கள் இந்து மதத்தைச் சேர்ந்தவர்களாகவும், 01.07.2021 அன்று 18 வயது பூர்த்தியடைந்தவராகவும், 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

2. விண்ணப்ப படிவத்தை https://namakkalnajaneyar.hrce.tn.gov.in மற்றும் www.hrce.tn.gov.in ஆகிய இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது இத்திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரில் பெற்றுக் கொள்ளலாம். நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் மட்டுமே தகுதிகளுக்கான சான்றிதழ்களின் நகல்களை இணைத்து ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியே விண்ணப்பிக்க வேண்டும்.

3. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் **"உதவி ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு நரசிம்மசுவாமி திருக்கோயில் அலுவலகம், ஆஞ்சநேயர் திருக்கோயில் வளாகம், நாமக்கல்–637001"** என்ற முகவரிக்கு 21.01.2022 மாலை 5.45 மணிக்குள் கிடைக்கும் வண்ணம் அனுப்புதல் வேண்டும்.

3. இப்பணியிடங்கள் அரசாணை எண்.114, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையத்துறை, நாள் 03.09.2020–ல் ஏற்படுத்தப்பட்ட விதிகளைப் பின்பற்றி நிரப்பப்படும்.

4. அறநிறுவனங்கள், அரசுத்துறை, உள்ளாட்சி நிர்வாகம் மற்றும் சட்டரீதியான அமைப்புகள் ஆகியவற்றிலிருந்து பணி நீக்கம் அல்லது விலக்கம் செய்யப்பட்டவர்கள், திருக்கோயில்களின் நலன்களுக்கு எதிராக செயல்பட்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்களாவர்.

5. தகுதியான விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

6. பணி நியமனம் இந்து சமய அறநிலையத்துறையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டதாகும்.

7. இதர விபரங்கள் மற்றும் நிபந்தனைகளை திருக்கோயில் அலுவலகத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

கோ.தமிழரசு,B.Com.,
தக்கார்/உதவி ஆணையர்.

பெ.ரமேஷ், MA.,BL.,
உதவி ஆணையர்/செயல் அலுவலர்
(தொ.பே.எண்.04286–233999)

# அருள்மிகு நரசிம்ம சுவாமி திருக்கோயில்,

# நாமக்கல் –637001

## வேலைவாய்ப்பு விண்ணப்ப படிவம்

விண்ணப்பிக்கும் பதவி பெயர் :……………………………………

1. விண்ணப்பதாரரின் பெயர் :
2. தந்தை/பாதுகாவலர் பெயர் :
3. ஆண்/பெண் :
4. பிறந்த தேதி :
5. திருமணம் ஆனவரா :
6. தாய்மொழி :
7. தேசிய இனம் :
8. இனம் மற்றும் மதம் :
9. குற்றவியல் வழக்கு பதியப்பட்டதா :
10. முழு முகவரி (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) :
11. மின்னஞ்சல் முகவரி :
12. கைபேசி எண் :
13. கல்வித்தகுதி :
14. தொழில் நுட்பக் கல்வித் தகுதிகள்

தொழில் நுட்பக் கல்வித் தகுதிகள்

| தொழில் நுட்பக் கல்வித் தகுதி | கிரேடு | சான்றிதழ் எண் | சான்றிதழ் வழங்கிய தேதி |
|---|---|---|---|
| | | | |

15. முன் அனுபவம் :

16. நன்னடத்தைச் சான்று இரண்டு
அ. கடைசியாக கல்வி பயின்ற
இடத்தில் பெற்றது :

ஆ.அரசிதழ் பதிவு பெற்ற
அலுவலரிடமிருந்து பெற்றது

17. மனுதாரரின் உறவினர்கள் யாரேனும் :
திருக்கோயில் பணியில் உள்ளனரா
என்ற விவரம்

18. உடற்தகுதி பெற்றுள்ளீரா :

19. பொது விவரங்கள் :

## <u>உறுதிமொழி</u>

இவ்விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்களனைத்தும் படித்துப் பார்த்தேன். அவை என் அறிவிற்கு எட்டியவரை உண்மையானவை சரியானவை மற்றும் முழுமையானவை தேர்விற்கு முன்போ அல்லது பிறகோ அல்லது எத்தருணத்திலோ இவ்விவரங்களில் ஏதேனும் தவறானவை. உண்மைக்குப் புறம்பானவை அல்லது தகுதியின்மை என அறியும் பட்சத்தில் விண்ணப்ப நிராகரிப்பு உட்பட என் மீது திருக்கோயில் நிர்வாகம் எடுக்கும் எவ்வித நடவடிக்கைக்கும் கட்டுப்படுகிறேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்